திரு. பி. எஸ். மணியன் : இது போன்ற நீர்த்தேக்கங்கள் ஆய்வு செய்யப்படுகிறபோது பல சிக்கல்கள் ஏற்படுகின்றன. ஒரு டன்னுக்கு மூவாயிரத்திற்குமேல் செலவானல் அது அன்எக்கனுமிகல் என்று கைவிடப்படுகிறது. இதைப் பரிசீலிக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்தத் திட்டத்தைப் பற்றி சிக்கல் எதுவும் இல்லை. டன்னுக்கு 1,440 ரூபாய் என்ற அடிப்படையில்தான் இது கணக்கிடப்பட்டிருக்கிறது.

திருப்பூர் அணை

* 75 வினா—திரு. சு. **துரைசாமி :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 3—12—69-ல் நிர்வாகப் பொறியாளர், கோவைக் கோட்டம், திருப்பூர் அணையைப் பார்வையிட்டாரா ?

(இ) ஆம் எனில், அதன் பேரில் எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) ஆழ்ந்த ஆய்வுக்குப்பின் இந்த அணையின் உச்சமட்ட அளவிற்குத் தேங்கும் நீர் இதன் கீழுள்ள கிணறுகளில் நீர் மட்டம் உயர்வதற்குப் போதுமானது என்று தெரிய வருகிறது. எனவே அணையின் உச்ச மட்டத்தை உயர்த்தத் தேவையில்லை.

'குட்டைத் திட்டம்'

* 76 வினா—திரு. **பி. எஸ். மணியன் :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு **விடையளிப்பாரா—**

(அ) நீர்ப்பாசனப் பிரிவில் குட்டைத் திட்டம் (Pond Schemes) சில பகுதிகளில் மட்டும் அமுல் நடத்தப்படுகிறதா ?

(இ) ஆம் எனில், மாநிலம் முழுவதும் இத்திட்டத்தை விரிவு படுத்துவது குறித்து அரசு பரிசீலிக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) & (இ) கோவை, சேலம் மாவட்டங்களிலும் மதுரை மாவட்டத்தின் சில பகுதிகளிலும் மட்டும் செயல்பட்டு வந்த "குட்டைத் திட்டம்", தஞ்சாவூர் மாவட்டம் நீங்கலாக எல்லா மாவட்டங்களுக்கும் விரிவு படுத்தப்பட்டுள்ளது.

திரு. சோ. அழகர்சாமி : குட்டைத் திட்டம் என்பது வறட்சிப் பகுதிகளுக்கு மிகவும் உபயோகமான திட்டமாகும். வறட்சிப் பகுதிகள் என்று மத்திய சர்க்காரும், மாநில சர்க்காரும் அறிவித்திருக்கிற பகுதிகளுக்கு எல்லாம் விஸ்தரிக்க அரசாங்கம் ஆவன செய்யுமா ?